[5th March 1964

Central Co-operative Institutions.

* 159 Q.—Sri R. S. VEERAPPA CHETTIAR : Will the Hon. the Minister for Food be pleased to state—

(*a*) whether there is any proposal for the de-centralisation of powers of the Central Co-operative Institutions; and

(*b*) if so, the details thereof?

கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்ருடியார் :

(அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. ரா. சு. வீரப்ப செட்டியார் : ஒரே இடத்தில் இம்மாதிரி யான அதிகாரங்கள் எல்லாம் குவிந்து கிடப்பதால் கீழேயுள்ள கூட்டுறவு ஸ்தாபனங்கள் எல்லாம் சரியாக வேலை செய்ய முடிவ தில்லை என்பதைச் சர்க்கார் அறியுமா?

கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்ருடியார் : அதிகாரங்கள் எங்கே குவிந்து கிடக்கின்றன என்று கனம் அங்கத் தினர் அவர்கள் குறிப்பிடுகிருர்கள் என்று தெரியவில்லை. அவர் கள் கேட்டிருக்கும் கேள்வியில் சென்ட்ரல் கோவாப்ரட்டீவ் பாங் கைப்பற்றி எண்ணியிருக்கிருர்கள் என்று நினைக்கிறேன். இதனி டத்தில் அதிகாரங்கள் ஒன்றும் குவிந்து கிடக்கவில்லை என்று நினைக்கிறேன்.

திரு. ரா. சு. வீரப்ப செட்டியார் : சென்ட்ரல் பாங்க்குக்கு உள்ள அதிகாரங்கள் ஏற்கெனவே யூனியனுக்குப் பகிர்ந்து கொடுத் தாற் போல இப்போது யூனியனுக்கு அதிகாரங்களைக் கொடுக்க அரசாங்கம் முன் வருமா?

கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்ருடியார் : இப்போது ஐந்து விதமாக இருக்கிறது. ஒன்று, கூட்டுறவு சென்ட்ரல் பாங்க்; இரண்டு, கோவாப்பரேட்டிவ் டிஸ்ட்ரிக்ட் பாங்க்; மூன்று, கோவாப்பரேட்டிவ் மார்க்கெட்டிங் ஃபெடரே ஷன், தஞ்சாவூர்; நான்கு, டிஸ்ட்ரிக்ட் ஹாண்ட்லூம் வீவர்ஸ் ஃபெடரேஷன்; ஐந்து, கோவாப்பரேட்டிவ் மில்க் சப்ளை யூனியன். இவைகளுக்குச் சேர்ந்த சங்கங்களைக் கண்காணித்து வருகிருர் கள். தனியாக இந்த அதிகாரம் கொடுக்க வேண்டும் என்று சொன்னல் அதை பரிசீலனை செய்துதான் சொல்ல முடியும்.

திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, அரசாங்கக் கணக்கு களைப் பரிசீலிக்க தனியாக ஒரு அமைப்பு இருக்கிறது. அது போல கூட்டுறவு ஸ்தாபனங்களின் கணக்குகளைப் பரிசீலிக்க தனியாக ஒரு அமைப்பு இருக்கிறதா? இல்லையென்ருல் அமைப்பதற்கு ஏற்பாடு செய்யப்படுமா?

கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்ருடியார் : கணக்குகளைத் தணிக்கை செய்ய கூட்டுறவு ஆடிட்டர்கள் தனிப் பட்ட முறையில் இருந்து கொண்டிருக்கிருர்கள்.

5th March 1964]

திரு. ம. கமலநாதன் : கனம் தலைவர் அவர்களே, இந்த அதிகாரங்களைப் பிரித்துக் கொடுக்க உத்தேசம் இல்லையென்றாலும் சென்ட்ரல் பாங்குகளையாவது பிரிக்க உத்தேசம் இருக்கிறதா ?

கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் : சென்ட்ரல் பாங்க் என்று சொன்னால், நான் நினைக்கிறேன் அவர்கள் சொல்லுவதிலிருந்து, பெரிய டிஸ்ட்ரிக்ட் பாங்குகளை இரண்டாகப் பிரிக்க வேண்டுமென்று சொல்லுகிறார்கள் என்று. தற்சமயம் அந்த விதமான அபிப்பிராயம் இல்லை.

திரு. செ. மாதவன் : கூட்டுறவு ஸ்தாபனங்களிலேயே ஆடிட்டர்கள் இருக்கிறார்கள். அவர்களே அந்த ஸ்தாபனங்களின் கணக்குகளைப் பார்க்கிறார்கள். சர்க்கார் அலுவலகங்களின் கணக்குகளைத் தனியாக அக்கவுண்டண்ட் ஜெனரல் ஆபீசில் தணிக்கை செய்கிறார்கள். கூட்டுறவு ஸ்தாபனங்கள் அதிகமாக ஆகிவிட்ட காரணத்தினால் தனியாக அக்கவுணட்ஸ் டிப்பார்ட்மெண்ட் என்று வைத்து தணிக்கை செய்ய ஏற்பாடு செய்வார்களா ?

கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் : நான் முன்பே சொன்னேன், தனியான ஸ்தாபனங்களுக்கும் அவர்களுக்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லாத முறையில் தான் ஆடிட் செய்து கொண்டிருக்கிறார்கள்

Qualification of Government employees for promotions

* 160 *Q.*—Sri R. S. VEERAPPA CHETTIAR : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether there is any Government Order barring the Government servants from further promotions if they have not secured 40 per cent of marks in English and Tamil in the S.S.L.C Class, even if they have got long service ; and

(*b*) if so, whether it would be applicable to the Government servants belonging to the Scheduled and most backward classes?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : (*a*) & (*b*) In the Service Rules definite academic or professional qualifications have been prescribed at every stage of appointment to the various categories of posts. A person who gets exemption from the prescribed qualification and is appointed to the lowest category cannot be promoted to the higher categories of the same service or other posts in any other service unless he acquires the qualification prescribed for those categories or unless the relevant rules relating to qualification are relaxed in his favour at every stage as the exemption granted to him for appointment to the lowest category is valid in respect of his appointment to that category only. Where the rules prescribe the " minimum general educational qualification ", the candidate should have obtained at the S.S.L.C. examination not less than 40 per cent of the marks in English and Tamil. In the case of candidates belonging to the Scheduled Castes or Scheduled Tribes, this minimum percentage is 35. This concession is not applicable to other backward classes.